வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி 23.04.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

- பகல்காம் தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து, பிரதமர் திரு. நரேந்திரமோடி சவூதி அரேபியாவில் இருந்து பாதியிலேயே புதுடில்லி திரும்பி, உயர்நிலை அவசர கூட்டம் நடத்தினார்.
- மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று, ஜம்மு-காஷ்மீரின் பகல்காம் பகுதியில், திவிரவாதத் தாக்குதல் நிகழ்ந்த இடத்தை நேரில் பார்வையிட்டு, நிலவரங்களை ஆய்வு செய்தார்.
- தமிழக ஆளுநர் ஏற்பாடு செய்துள்ள துணைவேந்தர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர், வரும் 25,26ஆம் தேதிகளில் தமிழகம் வருகிறார்.
- புதுச்சேரி அரசின் போக்குவரத்துத் துறையில், இளநிலை பொறியாளர், ஆய்வாளர் பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 10 பேருக்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று, பணி ஆணை வழங்கினார்.

-----------------------

*மோடி-காஷ்மீர் 1 (17)*

பகல்காம் தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து, 2 நாள் சவூதி அரேபிய பயணத்தை பாதியிலேயே முடித்துக் கொண்டு, இன்று காலை புதுடில்லி திரும்பிய பிரதமர் திரு. நரேந்திரமோடி, டெல்லி விமான நிலையத்தில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித்தோவல், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி ஆகியோருடன் அவசர கூட்டம் ஒன்றை நடத்தினார். நேற்று பீற்பகல் தீவிரவாத தாக்குதல் குறித்து தகவல் கிடைத்தவுடன். பிரதமர்

திரு. நரேந்திர மோடி, சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் உடனான இருதரப்பு பேச்சு வார்த்தைகளை 2 மணி நேரம் தாமதித்து, ஜம்மு-காஷ்மீர் நிலவரங்களை ஆய்வு செய்தார். சவுதி அரசால் நேற்று இரவு வழங்கப்படுவதாக இருந்த விருந்தில் பங்கேற்பதையும், அவர் தவிர்த்து விட்டு, நேற்று இரவே, ஜெட்டாவில் இருந்து புதுடெல்லிக்கு புறப்பட்டார். இன்று ஆஸ்திரேலிய பிரதமர் திரு. ஆண்டனி அல்பனீஸ், பிரதமர் திரு. நரேந்திர மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, ஜம்மு-காஷ்மீர் தீவிரவாதத் தாக்குதலை கண்டித்தார். அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப், மற்றும், இங்கிலாந்து, ஜெர்மனி உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களும், ஜம்மு-காஷ்மீர் தீவிரவாத தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

<u>மோடி-காஷ்மீர் 2 (6)</u>

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி ஆகியோர், மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷாவை தொடர்பு கொண்டு, தீவிரவாதத்திற்கு எதிரான அரசின் நடவடிக்கைகளுக்கு, முழு ஆதரவு தெரிவித்தனர். கட்சி வேறுபாடின்றி, பல்வேறு அரசியல்கட்சித் தலைவர்களும், ஜம்மு-காஷ்மீர் தீவிரவாதத் தாக்குதலை கண்டித்துள்ளனர்.

-----------------------

<u>அமித் □ா 1 (4)</u>

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று, ஜம்மு-காஷ்மீரின் பகல்காம் மாவட்டத்திற்கு உட்பட்ட பாயிசரன் வனப் பகுதியில், திவிரவாதத் தாக்குதல் நிகழ்ந்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்டு, நிலவரங்களை ஆய்வு செய்தார்.

அமித் □ ா 2 (15)

(வாய்ஸ்)

பகல்காம் தீவிரவாத தாக்குதலில் காயமடைந்து, அனந்தநாக் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ள சுற்றுலா பயணிகளின் உடல்நிலை குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கேட்டறிநதார். முன்னதாக, தீவிரவாதத் தாக்குதலில் பலியானவர்களின் உடல்களுக்கு, ஸ்ரீநகரில், திரு. அமித் ஷா மலரஞ்சலி செலுத்தினார். சம்பவம் குறித்து, ஒவ்வொரு இந்தியரும் வேதனை அடைந்து இருப்பதாக அவர் கூறினார். தீவிரவாதத்திற்கு இந்தியா அடிபணியாது என்றும், அப்பாவிகளை சுட்டுக் கொன்ற தீவிரவாதிகளை, அரசு சும்மா விடாது என்றும், பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் உட்பட, நாட்டு மக்கள் அனைவருக்கும் அவர் உறுதி அளித்தார். தீவிரவாத தாக்குதலில் பலியானவர்களின் உடல்கள், தாக்குதல் பகுதியில் இருந்து, சிறப்பு விமானம் மூலம் ஸ்ரீநகருக்கு எடுத்து வரப்பட்டு பின்னர் அங்கிருந்து, அவரவர் சொந்த ஊருக்கு, விமானம் மூலம் அனுப்பி வைக்கப் பட்டன. பகல்காம் தீவிரவாத தாக்குதலில், 2 உள்ளூர்வாசிகள் உட்பட, 26 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்ததாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

-------------------------

ராஜ்நாத்-காஷ்மீர் (16)

ஜம்மு-காஷ்மீர் பாதுகாப்பு நிலவரங்கள் குறித்து, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் இன்று புதுடெல்லியில், முப்படைத் தலைவர்களுடன், மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார். பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு, உயர்நிலை அதிகாரிகள் விரைந்து அனுப்பப் பட்டுள்ளதாகவும், உள்ளூர் அளவிலான படைப் பிரிவுகள், உஷார் நிலையில் வைக்கப் பட்டுள்ளதாகவும், பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அண்டைப் பகுதிகளில் இருந்தும், கூடுதல் பாதுகாப்புப்

படையினர், காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதிக்கு வரவழைக்கப்பட்டு, தீவிரவாதிகளுக்கு எதிரான தேடுதல் பணிகள் தீவிரமாக்கப் பட்டுள்ளன. வடக்கு காஷ்மீரின் ஊரி நலா எல்லைப் பகுதியில், இந்திய ராணுவத்தின் ஊடுருவல் எதிர்ப்பு நடவடிக்கையில், ஆயுதம் தாங்கிய 2 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப் பட்டதாகவும், ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பகல்காம் தாக்குதலில் ஈடுபட்ட 3 தீவிரவாதிகளின் உருவப் படங்களை, ஜம்மு-காஷ்மீர் காவல் துறை, மற்றும், புலனாய்வு அமைப்புகள், இன்று வெளியிட்டுள்ளன. தாக்குதலை கண்டித்து, காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதியில், இன்றைய தினம் முழு அடைப்பு நடத்தப்பட்டது.

------------------------

தமிழ்நாடு தீவிரவாதம் (7)

பகல்காம் தீவிரவாத தாக்குதலில் பலியானவர்களுக்கு இன்று தமிழக சட்டமன்றத்தில் இரங்கல் தெரிவிக்கப் பட்டது. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தினர். ஜம்மு-காஷ்மீரில் சிக்கி உள்ள, தமிழகத்தைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான உதவிகளை வழங்க, டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில், 24 மணி நேர உதவி எண் நிறுவப் பட்டுள்ளதாக, முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின் தெரிவித்தார்.

-----------------------

தன்கர் தமிழ்நாடு (8)

உதகமண்டலம் ஆளுநர் மாளிகையில் நடைபெற உள்ள, பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர், வரும் 25,26ஆம் தேதிகளில், 2 நாள் பயணமாக தமிழகம் வருகிறார். குடியரசுத் துணைத் தலைவரின் வருகையை ஒட்டி, சம்பந்தப்பட்ட பகுதிகளில், பாதுகாப்பு ஏற்பாடுகள் வலுப்படுத்தப் பட்டுள்ளன. தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி ஏற்பாடு செய்துள்ள இம்மாநாட்டில், மத்திய-மாநில பல்கலைக் கழகங்கள்,

மற்றும், தனியார் உயர்கல்வி நிறுவனங்களின் துணை வேந்தர்கள் பங்கேற்க உள்ளனர்.

-------------------------

*<u>ரங்கசாமி பணி ஆணை</u>* (8)

புதுச்சேரி அரசின் போக்குவரத்துத் துறையில், இளநிலை பொறியாளர், மற்றும், உதவி மோட்டார் வாகன ஆய்வாளர் பணியிடங்களுக்கு, போட்டித் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 பேருக்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று, பணி நியமன ஆணைகளை வழங்கினார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், போக்குவரத்துத் துறை செயலர் டாக்டர் முத்தம்மா, மற்றும் உயர்நிலை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

-------------------------

*<u>வெயில் – மணிமொழி (9)</u>*

புதுச்சேரியில், கோடை வெயில் தீவிரமாகி வரும் நிலையில், பொது மக்கள் உரிய உணவு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம், வெயிலின் தாக்கத்தால் ஏற்படும் பிரச்சனைகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என சுகாதாரத் துறை கேட்டுக் கொண்டுள்ளது. சுகாதாரத் துறையின் முதன்மை மருத்துவ அதிகாரி டாக்டர் மணிமொழி இது குறித்து எமது செய்தியாளருக்கு அளித்த பேட்டியில, கோடைக் காலத்தில், மாரடைப்பு, மற்றும், சிறுநீரக பிரச்சனைகள் 10 மடங்கு அதிகரிக்க வாய்ப்புகள் இருப்பதால், பொது மக்கள் வெயிலின் தாக்கத்தை தவிர்க்க வேண்டியது அவசியம் என்றார். இதற்கான வழிமுறைகள் குறித்து அவர் கூறுகையில்.....

(வாய்ஸ்)

-------------------------

*புதுச்சேரி குறை தீர்ப்பு (6)*

புதுச்சேரியில், இன்று, உழவர்கரை தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில், தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவசங்கர், அரசுச் செயலர் டாக்டர் முத்தம்மா ஆகியோர், அனைத்துத் துறை அதிகாரிகளுடன், நேரடி ஆய்வு மேற்கொண்டனர். பிச்சவீரன்பேட், மூலக்குளம் உள்ளிட்ட இடங்களில், மக்களின் குறைகளை இவர்கள் கேட்டறிந்து, உரிய நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினர்.

-------------------------

*புதுச்சேரி-ஓய்வூதியம் (10)*

புதுச்சேரி, காரைக்கால், ஏனாம், மாகே பகுதிகளைச் சேர்ந்த ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள், 2025-26-ஆம் ஆண்டிற்கான ஆயுள் சான்றிதழை, தத்தம் பகுதிகளில் உள்ள அரசுக் கருவூலம் அல்லது துணைக் கருவூலத்தில் நேரிலோ, அல்லது, ஆன்-லைன் முறையிலோ சமர்ப்பிக்க வேண்டுமென, புதுச்சேரி அரசின் கணக்கு மற்றும் கருவூலத்துறை அறிவித்தள்ளது. மத்திய அரசின் ஜீவன் பிரமாண் இணைய தளம் அல்லது வீட்டிற்கே வந்து அஞ்சல் துறை வழங்கும் சேவையை இதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் மே 2 முதல், மே 30-ஆம் தேதிக்குள் ஆயுள் சான்றிதழ் சமர்ப்பிக்க தவறினால், மேற்கொண்டு ஓய்வூதியம் வழங்கப்பட மாட்டாது என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------

*வானிலை (12)*

தென் தமிழக கடலோரப் பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்கு சுழற்சியும், தென்னிந்தியப் பகுதிகளின் மேல், வளிமண்டலத்தின் கீழடுக்கில் கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதியும் நிலவுவதால், இன்றைய தினம், தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வடதமிழகத்தில், ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால்

பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாளைய தினம், தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல், மிதமான மழை எதிர்ப்பார்க்கப் படுகிறது. அதிகபட்ச வெப்பநிலையில், வரும் 26-ஆம் தேதி வரை, பெரிய மாற்றங்களுக்கான வாய்ப்பு குறைவு தான் என்றாலும், ஒருசில இடங்களில் வெப்பநிலை சற்று அதிகரிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

------------------------

***ஐபிஎல் (5)***

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு, ஹைதராபாத்தில் நடைபெறும் போட்டியில், ஹைதராபாத்-மும்பை அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு லக்னோவில் நடைபெற்ற போட்டியில், டெல்லி அணி, 8 விக்கெட் வித்தியாசத்தில், லக்னோ அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

------------------------

***தொல்லியல் ஆய்வு (16)***

இந்திய தொல்லியல் ஆய்வுத் துறை, இன்று புதுடெல்லியில், மத்திய தொல்லியல் ஆலோசனை வாரியத்தின் 38-ஆவது கூட்டத்தை, பாரத் மண்டபத்தில் நடத்தியது. தொடக்க அமர்வுக்கு தலைமையேற்ற, மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத், பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், மரபுச் சின்னங்கள் மற்றும் வரலாற்றுச் சின்னங்களை பாதுகாப்பதற்கான தொல்லியல் ஆய்வுத் துறையின் தொடர்ச்சியான முயற்சிகள், இக்கூட்டத்தில் மறு ஆய்வு செய்யப்பட்டு, எதிர்காலத் திட்டங்களும் உருவாக்கப்படும் என்றார். இந்தியா பற்றிய உலகின் பார்வை தற்போது பெரிய அளவில் மாறி இருப்பதாகவும், இந்தியர் மனங்களில், பெருமித உணர்வு மேம்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார். கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் பதில் அளிக்கையில்,

பகல்காம் தீவிரவாத தாக்குதலால், காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதியில், சுற்றுலாத் துறைக்கு ஏற்படும் பாதிப்புகளை குறைக்க, இயன்ற எல்லா முயற்சிகளையும் மத்திய அரசு மேற்கொள்ளும் என்றார். இதுகுறித்து ஜம்மு-காஷ்மீர் தலைமைச் செயலர் மற்றும் சுற்றுலாத் துறை அதிகாரிகளை தாம் தொடர்பு கொண்டுள்ளதாகவும், அவர் கூறினார்.

------------------------

*ஒரே நாடு-ஒரே தேர்தல் (12)*

அடிக்கடி தேர்தல் வருவதால் நாட்டின் வளர்ச்சி பாதிக்கப் படுவதால், ஒரே நாடு-ஒரே தேர்தல் நடைமுறை தற்போது மிக அவசியம் என்று, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷ்வ்ராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், ஒரே நாடு-ஒரே தேர்தல் பற்றிய மாணவர் மாநாட்டில் உரையாற்றிய அவர், அடிக்கடி தேர்தல் நடத்த, அதிகப் பணம் செலவாகும் அதே வேளை, தேர்தல் வந்துவிட்டால், வளர்ச்சித் திட்டங்கள் உட்பட, அரசின் எல்லா செயல்பாடுகளும் முடங்கிப் போவதாகக் கூறினார். மற்றொரு மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா இம்மாநாட்டில் பேசுகையில், முன்னேறிய இந்தியாவை உருவாக்கும் இயக்கத்தில், இளைஞர்கள் முக்கிய பங்கேற்க வேண்டும் என்றார். இதை கருத்தில் கொண்டே, நாட்டில் ஒரு லட்சம் இளம் தலைவர்களை உருவாக்கும் இலக்குடன், பிரதமர் திரு. நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக, அவர் தெரிவித்தார்.

------------------------